கண் மூடித்தூங்கும் எந்தன் தோழா
கல்லறை திறந்து கொஞ்சம் வாடா

காலாற நடந்து செல்வோம் தெருவில்
தோழோடு இல்லை எந்தன் அருகில் நீ

அரும்பு மீசை சிரிப்பைக்காண எந்தன் விழிகள் தேடுது
விரும்பி நீயும் போட்ட குப்பி எந்தன் கழுத்தில் ஆடுது

காச்சல் வந்த போதிலுமே பக்கம் இருப்பாய் நான்
களத்தில் நின்ற போதிலுமே பக்கம் இருப்பாய் 2
போர் வெடியின் ஓசையிலே பொழுது புலர்ந்திடும் உந்தன்
புன்னகையை பார்த்தத்தானே கண்கள் விடியும் தோழ
கண்கள் விடியும்

அரும்பு மீசை சிரிப்பைக்காண எந்தன் விழிகள் தேடுது
விரும்பி நீயும் போட்ட குப்பி எந்தன் கழுத்தில் ஆடுது

காயப்பட்ட வேளையிலும் நீ கத்த வில்லையே உன்
கண்கள் மட்டும் என்னை விட்டு அகலவில்லையே 2
குருதியோடு சேர்ந்து உந்தன் உயிரும் வழிந்தது
என்னை பிடித்திருந்த உந்தன் கையும் மெல்ல சரிந்தது
தோழா மெல்ல சரிந்தது

அரும்பு மீசை சிரிப்பைக்காண எந்தன் விழிகள் தேடுது
விரும்பி நீயும் போட்ட குப்பி எந்தன் கழுத்தில் ஆடுது

குல்லறையில் வதைக்கும் போது கண்ணீர்பயணம் உன்
விடைபெறுதல் கண்டபோது பகையும் கோபம் 2
வல்ல புலி என்று உன்னை காலம் போற்றும்
எந்தன் வாழ்நாளும் உந்தன் கனவை சேர்ந்தே ஏர்க்கும்
தோழா சேர்ந்தே ஏர்க்கும்

கண் மூடித்தூங்கும் எந்தன் தோழா
கல்லறை திறந்து கொஞ்சம் வாடா